# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2390/19 - 2024 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2024.06.28

*2390/19 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க அறிவித்தல்கள்**

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு, 6 ஆவது பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01.
2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. பின்னர் திருத்தம் செய்யப்பட்ட, 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.


1A - PG 6764 — 404 (2024/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3.* *நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2024 மே 13 ஆம் திகதிய* 24/0939/604/104 *ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினதும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரின் கண்காணிப்புடன் சேர்த்து வாசிக்கப்படும் அவ் விஞ்ஞாபனத்திற்கு 2024 யூன் மாதம் 03 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதி இலக்கம் 3.1 மற்றும் இலக்கம் 3.2 வெளியிடப்படுகின்றது;*

*3.1* மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் **I ஆம் அட்டவணையில்** விபரிக்கப்பட்டுள்ள, கீழே குறிப்படப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் அவற்றின் உள்ளீடுகள் இத்தால் நீக்கப்படுகின்றன;

| | நிரல் I<br><br>**இ.மு தலைப்பு** | நிரல் II<br><br>**இ.மு குறியீடு** | | நிரல் III<br><br>**விபரம்** | நிரல் IV<br><br>**இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் (ICL)** |
|---|---|---|---|---|---|
| **18, 241** | **07.13** | | | **உலர்த்திய அவரை இன மரக்கறி வகைகள், கோது நீக்கியவை, தோல் நீக்கப்பெறாதவை அல்லது பிளக்கப்பட்டவை அல்லது இரண்டும் செய்யப்படாதவை.** | |
| | | | --- | பயறு: | |
| | | 0713.31.19 | ---- | பிற | **L** |
| | | | --- | உழுந்து: | |
| | | 0713.31.22 | ---- | பிளக்கப்பட்டவை | **L** |
| | | 0713.31.29 | ---- | பிற | **L** |
| | | 0713.35 | -- | கௌபி (விக்னா அங்குயிகுலாதா): | |
| | | 0713.35.90 | --- | பிற | **L** |
| | | | | | |
| **244** | **10.08** | | | **சாமை கோதுமை, திணை மற்றும் பல் விதைகள்; வேறு தானியங்கள்** | |
| | | | - | திணை: | |
| | | 1008.29 | -- | பிற: | |
| | | 1008.29.10 | --- | குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) | **L** |
| | | | | | |
| **248** | **12.02** | | | **வேர் கடலை, வறுக்கப்படாதவை அல்லது வேறு வகையில் சமைக்கப்படாதவை. கோது நீக்கப்பட்டவை அல்லது உடைக்கப்பட்டவை** | |
| | | 1202.30 | - | விதை | **L** |
| | | | - | பிற: | |
| | | 1202.41 | -- | கோதுடன் கூடியவை | **L** |
| | | 1202.42 | -- | கோது நீக்கியவை, உடைக்கப்பட்டவை அல்லது உடைக்கப்படாதவை. | **L** |
| | | | | | |
| **250** | **12.08** | | | **எண்ணைய் விதை மாவும் துவல்களும் அல்லது கொழுப்பார்ந்த பழங்கள், கடுகு நீங்கலாக.** | |
| | | 1208.10 | - | சோயா அவரையின் | **L** |

*3.2* சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால், மேலே ஒழுங்குவிதி இலக்கம் *3.1* இல் குறிப்பிடப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடுகள் *0713.31.19*, *0713.31.22*, *0713.31.29*, *0713.35.90*, *1008.29.10*, *1202.30*, *1202.41*, *1202.42* மற்றும் *1208.10* இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை, அவ் அனைத்துப் பொருட்களினதும் கப்பல் ஏற்றுபொருள் பற்றுச்சீட்டின் அல்லது விமான ஏற்றுபொருள் பற்றுச்சீட்டின் தினத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட விவசாயத் திணைக்களத்தின் தேசிய தாவர தடுப்புக் காப்பு சேவையின் தேசிய தாவர தடுப்புக் காப்பு உரிமத்தை சமர்ப்பித்தலின் கீழ், விடுவிப்பு செய்தல் வேண்டும்.

*4.* மேலே குறிப்பிடப்பட்டுள்ள *2023* ஆம் ஆண்டின் *01* ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் **I ஆம் அட்டவணைக்கு** கீழே குறிப்படப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் அவற்றின் உள்ளீடுகள் இத்தால் உட்சேர்க்கப்படுகின்றன;

| | நிரல் I<br>**இ.மு தலைப்பு** | நிரல் II<br>**இ.மு குறியீடு** | | நிரல் III<br>**விபரம்** | நிரல் IV<br>**இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் (ICL)** |
|---|---|---|---|---|---|
| **251** | **88.06** | | | **ஆளில்லா விமானம்** | |
| | | 8806.10 | - | பயணிகளை சுமக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டவை | **L** |
| | | | - | பிற, தொலை இயக்கக்கருவி பொருத்தப்பட்ட விமானம் மாத்திரத்திற்கானவை : | |
| | | 8806.21 | -- | விமானம் புறப்படும் போது அதிகபட்ச எடை 250 கிராமிற்கு மேற்படாதவை | **L** |
| | | 8806.22 | -- | விமானம் புறப்படும் போது அதிகபட்ச எடை 250 கிராமிற்கு மேற்பட்ட ஆனால் 7 கி.கிராமிற்கு மேற்படாதவை | **L** |
| | | 8806.23 | -- | விமானம் புறப்படும் போது அதிகபட்ச எடை 7 கி.கிராமிற்கு மேற்பட்ட ஆனால் 25 கி.கிராமிற்கு மேற்படாதவை | **L** |
| | | 8806.24 | -- | விமானம் புறப்படும் போது அதிகபட்ச எடை 25 கி.கிராமிற்கு மேற்பட்ட ஆனால் 150 கி.கிராமிற்கு மேற்படாதவை | **L** |
| | | 8806.29 | -- | பிற | **L** |
| | | | - | பிற: | |
| | | 8806.91 | -- | விமானம் புறப்படும் போது அதிகபட்ச எடை 250 கிராமிற்கு மேற்படாதவை | **L** |
| | | 8806.92 | -- | விமானம் புறப்படும் போது அதிகபட்ச எடை 250 கிராமிற்கு மேற்பட்ட ஆனால் 7 கி.கிராமிற்கு மேற்படாதவை | **L** |
| | | 8806.93 | -- | விமானம் புறப்படும் போது அதிகபட்ச எடை 7 கி.கிராமிற்கு மேற்பட்ட ஆனால் 25 கி.கிராமிற்கு மேற்படாதவை | **L** |
| | | 8806.94 | -- | விமானம் புறப்படும் போது அதிகபட்ச எடை 25 கி.கிராமிற்கு மேற்பட்ட ஆனால் 150 கி.கிராமிற்கு மேற்படாதவை | **L** |
| | | 8806.99 | -- | பிற | **L** |

5. திருத்தம் செய்யப்பட்ட, விசேட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணங்கள் வெளியிடப்பட்ட 2016 பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் I ஆம் அட்டவணைக்கு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு செலுத்த வேண்டிய இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணங்கள் இத்தால் உட்சேர்க்கப்படுகின்றது.

| தொடரிலக்கம் | பொருள் | இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணம் |
|---|---|---|
| 96 | ஆளில்லா விமானங்கள் | சீ.ஐ.எப் பெறுமதியில் 0.5% |

6. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கு "செயற்பாட்டு ஆலோசனைகள்" வழங்கப்பட வேண்டும்.

7. இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழுகின்ற எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதி முடிவானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

EOG 07-0086

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.